# மக்கள் இயக்கங்களின் செய்தி தொகுப்பு

தனிச்சுற்றுக்கு மட்டும் இதழ் : 1 ஏப்ரல் 2007

தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு அனைத்து பெண்களின் உரிமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

பெண்களின் நலனுக்காக குரல் கொடுத்துவரும் அமைப்பு இன்று மனித உயிர்கள் மீதும் மண்ணின் மீதும், நாம் உண்ணும் உணவின் மீதும் கவனம் செலுத்தி அதற்கான கருத்தரங்கம், பயிலரங்கம், பிரச்சாரம், பேரணி, பொதுக்கூட்டம் போன்றவைகளில் பெண்களை ஒன்றிணைத்து செயல்பட்டுவருகிறது. தேர்தல் சமயங்களின் மக்களின் பிரச்சனைகளை கண்டறிந்து, அதற்கேற்ப கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் வாக்குறுதிகளை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என மக்களிடம் பிரச்சாரம் செய்வது, விலைவாசி உயர்வை கட்டுபடுத்த அரசை வ–யுறுத்துவது, மதக்கலவரங்களையும், சாதிக்கலவரங்களையும் தூண்டும் மதவெறியர்களை மக்களிடம் அடையாளப்படுத்துவது. பேரிடர் காலங்களில் பெண்களுக்கு எந்த முறையில் பாதுகாப்பும், உதவியும் செய்ய வேண்டும் போன்ற செயல்பாடுகளில் எழுச்சி அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

கடந்த 19.1.2007, 20.1.07 ஆகிய 2 நாட்கள் மரபணு மாற்று தொழில் நுட்ப பயிலரங்கம் திருச்சி AICUF சென்டரில் நடைபெற்றது. இதில் விழுப்புரம், தேனீ, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களி–ருந்து விவசாயத்தில் ஈடுபட்டுவரும் பெண்களை அழைத்து பயிற்சி கொடுக்கப் பட்டது. இதில் 60 பெண்கள் கலந்துக் கொண்டனர்.

இந்த பயிலரங்கத்திற்கு தமிழக இயற்கை உழவர் அமைப்பை சார்ந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், நாதன், பசுந்தளிர் அமைப்பு, சாந்தி லீசா அமைப்பு, இயற்கை விவசாயிகள் புதுக்கோட்டை கணபதி, ஜெய்கிருஷ்ணா, கிரீன் பீஸ் பெங்களூர், பிரமிளா சென்னை, சாந்தி அரக்கோணம், விமலா சென்னை ஆகியோர் கலந்துக் கொண்டு பேசினார்கள்.

மரபணு மாற்று தொழில் நுட்பம் என்றால் என்ன? என்ற கேள்வியுடன் பயிற்சியை துவங்கினர். மரபணு மாற்றம் மூலம் ஏற்படும் பாதிப்புகளை குறிப்பிட்டு பேசும்போது இந்தியாவில் 70 கோடி பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நமது நாட்டின் முதுகெலும்பாக விவசாயம் இருந்து வருகிறது. ஆனால் இன்று நாம் என்ன பயிர் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை நமது விவசாயிகளோ, நமது நாடோ தீர்மானிப்பது இல்லை அந்நிய நாட்டின் பன்னாட்டு பகாசூர கம்பெனிகள் தான் தீர்மானிக்கிறது. மக்களின் உணவு தேவைகளை மறந்து, உற்பத்திக்கானபயிர் வகைகள் மாற்றப்பட்டு பணப்பயிர்கள் ஊக்குவிக்கப்பட்டு விவசாயம் வியாபாரமயமாக்கப்பட்டுள்ளது.

நமது நாடு கொண்டு வந்துள்ள விதைச்சட்டம் 2004 பாரம்பரியமாக உணவு உற்பத்தி செய்துவந்த விவசாயிகள் தங்களுடைய சேமிப்பு விதைகளை இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்து சான்றிதழ் பெற்றால் மட்டுமே வீடுகளில் விதைகளை வைத்திருக்கவும், உற்பத்தி செய்யவும் அனுமதியுள்ளது.

அப்படி அனுமதி பெறாமலும் சான்றிதழ் பெறாமலும் விதைகள் வைத்திருந்தால் விதைகளை பறிமுதல் செய்வதோடு, அவர்களுக்கு அபராதமும், தண்டனையும் அளிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் அடிப்படை உரிமையை பறிக்கும் சட்டமாகும்.

விவசாயிகளின் கையில் இருந்த பாரம்பரிய விதைகளை பறித்துக் கொண்டு மான்சாண்டோ, சின் ஜண்டா, பேயான், கார்கில் போன்ற பகாசூர பன்னாட்டு கம்பெனிகளிடம் விவசாயிகள் கையேந்தி நிற்கும் நிலைமைக்கு தள்ளியுள்ளது. விதைகளின் ஜீன்களை செலுத்தும் மரபணு விஞ்ஞானிகளுக்கு இதனால் ஏற்படும் ஆபத்து குறித்து தெரிவதில்லை அதில் உள்ள விஷம் செடியின் தண்டு, இலை பூ, காய், பழம் ஆகியவற்றில் இருக்கும் அதனை உட்கொள்ளும் விலங்குகளுக்கும் அதன்மூலம் மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நமது அரசு திட்டங்கள் பன்னாட்டு கம்பெனிகளுக்கு லாபம் சம்பாதித்து கொடுக்கும் திட்டங்களாகவும், விவசாயிகளை ஓட்டாண்டியாக்கி, தற்கொலைக்கு தள்ளும் நிலைமையும் அபாயமும் உள்ளது WTO வளரும் நாடுகளின் உணவு இறையாண்மையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. நாம் இதற்கான மாற்று கருத்துக்களை நம்முடைய விவசாயிகள், கிராம மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

அரசுக்கு வைக்கப்படும் கோரிக்கைகள் :–

- மரபணு மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பை விவசாயிகளிடம் எடுத்துரைக்க வேண்டும்.
- நம்முடைய பாரம்பரிய விவசாயத்தை மக்களிடம் ஊக்குவிக்க வேண்டும்.
- விவசாயிகள் தற்கொலை செய்துக்கொள்ள காரணமான பன்னாட்டு கம்பெனிகளின் விதைகளை விவசாயத்தில் அனுமதிக்கக் கூடாது.

**விவசாயிகளின் அடிப்படை உரிமையை கொல்லும் விதைச்சட்டம் 2004** ஐ அரசு திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த பயிலரங்கத்தை நிறைவு செய்தனர்.

# சாதி வெறியாட்டம்

சமத்துவபுரம், சமபந்தி, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற நடைமுறைகள் தமிழகத்தில் இருந்தாலும் தலித்துகள் என்று சொல்லக் கூடிய பள்ளன், பறையன், சக்கிலியர் என்ற தாழ்த்தப்பட்ட சாதியின மக்கள் ஒவ்வொரு நாளும் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும், பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதும் சாதிவெறியர்களின் காம வேட்டைக்கு இறையாக்கப்படுவதும் தொடர்கதையாக நடந்தேறி வருகிறது. இதற்கு அரசியல் கட்சிகளும், காவல் துறையும் பாதுகாப்பு குற்றவாளிகளை தப்பவிட்டு வருகிறது.

சாதிக்கலவரங்கள் நடக்கும்போது அதில் பெரிதும் பாதிக்கப் படுவதும், தாக்கப்படுவதும் பெண்களே. இவர்களை பாதுகாக்க வேண்டும். தலித் பெண்கள் அரசியல் அதிகாரம் பெற வேண்டும் தலித் பெண்கள் தலைமையேற்கவேண்டும். தலித் பெண்கள் வீரமானவர்கள், தைரியமானவர்கள் என்ற போராட்ட உணர்வோடு தொடங்கப்பட்டது தான் தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம்.

கடந்த 17.1.2007 அன்று தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கத்திற்கு ஆதிக்க சாதியால் தாக்கப்பட்டு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நகல், புகாரின் பெயரில் வழக்கை பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் இவை அனைத்தையும் தபால் மூலமாக அனுப்பட்டிருந்தது.

அதில் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், சிறுக்கிணர் அஞ்சல், நொச்சிப்பாளையம் அரிசன காலணி என்ற முகவரி யோடு வந்த புகாரின் சாராம்சம், நொச்சிப்பாளையம் அருந்ததியர் இனத்தை சேர்ந்த 50 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கொங்கு வேளாளக்கவுண்டர் சாதியினரிடத்தில் கூலி வேலை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆதிக்கசாதியைச் சேர்ந்த கோவிந்தசாமி, செந்தில் என்பவர் களிடம் தலித் வா-பர்களான கிட்டான் மகன் செல்வக்குமார் (வயது 30) பழனிச்சாமி (வயது 40) தேங்காய் குடோனில் பல வருடங்களாக கொத்தடிமையாக வேலை செய்து வந்துள்ளனர்.

கடந்த 11-01-2007 அன்று இருவருக்குமே உடல் நலமில்லாதக் காரணத்தால் முதலாளிகளிடம் ஒருநாள் ஓய்வு கேட்டுள்ளனர். தங்களின் உடல் நலம் பாதிப்பை கூறிய பின்பும், தேங்காய்களுக்கு வைக்க வேண்டி ஜீசர்பர் நூசிட்ஜீ கெமிக்கலை வைத்து விட்டுதான் போக வேண்டும் என கோவிந்தசாமியின் மகன் செந்தில் குமார் உத்தரவு போட்டுள்ளார். வேலை செய்யமுடியாத நிலையில் உள்ளோம் எனக் கூறியும், அதனை பொருட்படுத்தாமல் அருகி-ருந்த கட்டையால் பலமாக இருவரையும் தாங்கியுள்ளார் அடியின் வலியால் கதறியதைக் கேட்டு அங்கு வேலை செய்துக்கொண்டிருந்த செல்வி வயது (30) தடுக்க வந்தபோது அவரையும் பெண் என்றும் பாராமல் தாக்கி, சாதிப்பெயரைச் சொல்லி, வேலை செய்ய முடியாது என்று என்னையா எதிர்த்து பேசுறீங்க! என்று திட்டியுள்ளார். வேலை செய்யாமல் போனால் இங்கேயே கொன்று புதைத்து விடுவேன் என்று அரிவாளை தூக்கிக் கொண்டு கொலை வெறியோடு துரத்தி வந்துள்ளார்.

தப்பித்த தலித்துகள் ஊதியூர் காவல் நிலையத்திற்கு பாதுகாப்புத் தேடி ஓடியுள்ளார்கள். சட்டம் அனைவருக்கும் சமம். “சாதி மதம்; பாராமல் சொந்தம் பந்தம் என நினைக்காமல் என் கடமையை செய்வேன் இது கடவுள் மீது ஆணை என்று உறுதிமொழி” ஏற்று பதவிவகித்து வரும் காக்கி சட்டைகள், இதையெல்லாம் மறந்து ஆதிக்கசாதியின் பிடியில் அவர்கள் போடும் சட்டத்திற்கும், கட்டளைக்கும் கட்டுப்பட்டு அவர்கள் கொடுக்கும் காணிக்கை பெற்றுக் கொண்டு விசுவாசமாக நடந்து வரும் சம்பவம் தமிழகத்தில் இது சர்வ சாதாரணம். இப்படிப் பட்டவரில் ஒருவர் ஊதியூர் எஸ்.ஐ. சண்முகம் என்பவர். தலித்துக்கள் தங்களின் உயிரை பாதுகாத்துக் கொள்ள ஓடிவந்து புகார் கூறியபோது உடனடியாக குற்றவாளிகளான தேங்காய் குடோன் முதலாளி கோவிந்தசாமிக்கு போன் செய்து புகாரின் விவரத்தை சொல்லியுள்ளார். இதனை கேட்ட ஆதிக்கசாதியினர் குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முன்னாள் பஞ்சாயத்து தலைவரையும், இந்நாள் பஞ்சாயத்து தலைவியின் கணவரையும் அழைத்துக் கொண்டு கட்டப்பஞ்சாயத்து செய்து, வழக்குபதிவு செய்யாமல் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டு காயமடைந்த இருவருக்கும் எந்த சிகிச்சையும் கொடுக்காமல் பயமுறுத்தி வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். ஆதிக்கசாதியினர்களான முதலாளிகளை எதிர்த்து நாம் ஒன்றும் செய்ய முடியாது என தலித்துகளும் வீடு போய் சேர்ந்துள்ளனர்.

ஆனால் 12-01-2007 அன்று இரவு 7 மணியளவில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த செந்தில்குமார், நந்தகுமார், சுப்பிரமணி, சுப்பராயன், பெரியசாமி, சாமிநாதன், பழனிச்சாமி, சோமசுந்தரம் மற்றும் பலர் தலித் மக்கள் வாழும் பகுதிக்குள் வந்து “ஏண்டா சக்கிலி நாய்களா! நேற்று எங்க எதிரிலேயே காவல் நிலையத்தில் உட்கார்ந்து எங்களை பற்றி பயப்படாமல் பேசினீர்களே, இப்பொழுது எங்க ஊர் மக்கள் முன்பாக வந்து உட்காருங்கள்” என அடித்து உதைத்து வீடுகளுக்கு தீவைத்து கொளுத்தி அராஜகம் செய்துள்ளனர். அவர்கள் தாக்கியதில் ராஜ், மாரிமுத்து, பழனிச்சாமி, செல்வக்குமார், கோபால் ஆகியோர் காய மடைந்துள்ளனர்.

மேலும், செல்வி, சரோஜினி இருவரையும் பொதுமக்கள் மத்தியில் மானபங்கபடுத்தி அவர்களின் ஜாக்கெட்களை கிழித்து அடித்து உதைத்துள்ளனர். அத்துடன் ராஜன் என்பவரது வீட்டிற்கு தீ வைத்து கொளுத்தியுள்ளனர்.

தலித்துகளை தாக்கி, பெண்கள் என்றும் பாராமல் அடித்து மானபங்கம் செய்து வீடுகளுக்கு தீ வைத்த குற்றவாளிகள் தப்பி ஓடி ஓடிவிட்டனர். ஆனால் தப்பிய குற்றவாளிகளை தலித்துகள் தாக்கியதுப் போல நாடகமாடி தலித்துகள் மீது பொய்யான புகார் செய்து தாராபுரம் அரசு மருத்துவமனையில் சேர்ந்துள்ளார்கள்.

தலித்துகள் போன் மூலம் புகார் கொடுக்க முடியாத படி போன் ஒயர்களை துண்டித்துள்ளனர்.

ஆதிக்க சாதியின் ஏவலாளியாக செயல்படும் எஸ்.ஐ. சண்முகம் ஆலோசனைப்படி கோவிந்தசாமியின் தேங்காய் குடோனுக்கு தீ வைத்துக் கொண்டு, தலித்துகள் வைத்துப் போல தலித் பகுதிக்கு வந்து “தேங்காய் குடோனுக்கும் உங்க வீடுகளுக்கும் நீங்கள் தீ வைத்து விட்டு நாடகமா ஆடுகிறீர்கள்” என்று மிரட்டியுள்ளனர்.

தலித்துகள் தாக்குத-ல் பட்ட காயத்தை காட்டியும்

"இப்போது மருத்துவமனை இருக்காது காலையில் போங்கள்" என தடுத்துள்ளார். அதையும் பொருட்படுத்தாமல் இரவு 12 மணிக்கு மருத்துவமனைக்கு தலித்துகள் சென்றுள்ளனர்.

மக்களை பாதுகாக்கக்கூடிய பொறுப்பில் உள்ள எஸ்.ஐ. சண்முகம் ஆதிக்க சாதியினரின் கவனிப்பில் மிதந்து அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லி, குற்றவாளிகளை தலைமறைவாக இருக்கும்படி தப்பிக்கவிட்டுள்ளார். தலைமறை வானவர்களால் தலித் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதிப்பு ஏற்படலாம் என பல்வேறு அதிகாரிகள், தமிழக முதல்வர், மனித உரிமை ஆணையம், காவல் துறை தலைவர் போன்றவர் களுக்கும் தலித் ஆர்வலர்களுக்கு புகார் நகலை அனுப்பி யுள்ளனர். பலரின் உந்துதலின் பேரில் ஊதியூர் காவல் துறை குற்றவாளிகள் மீது 1989 SC/ST வன்கொடுமை தடுப்புச்சட்டம் 147, 341, 323, 435 IPC, *3(2)*(iii) பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

"நான் எழுதிய சட்டம் எங்களுக்கு எதிராக உள்ளது அதை எரிப்பேன்" என்று முழங்கியவர் டாக்டர். அம்பேத்கர் அரசியல் முகவரியை கொடுத்தவர் நமது தலைவர் அம்பேத்கர். சட்டத்தால் நியாயமும், நீதியும், பாதுகாப்பும் இருக்கும் என நம்பி செல்லும் மக்களுக்கு பாதுகாப்பு எங்கே? தனது மகன் கன்று குட்டியின் மீது தேரை ஓட்டி கொன்றான் என்பதற்காக தனது மகனையே பலிகொடுத்து, தண்டனை கொடுத்து நீதியை வென்றவன் ஆண்ட பூமி இது.

வேடனால் காயப்பட்டு பறந்துவந்து அரசன் மீது விழுந்த புறாவுக்காக தனது தசையை அறுத்து சிகிச்சை கொடுத்து பெருமைபடுத்தியவர்கள் பூமி இது.

நமது அரசியலமைப்பு சட்டம் யாருக்கு உதவிக் கொண்டுள்ளது. ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கும், அதிகார வர்க்கத்திற்கும், பணமுதலைகளுக்கும், அரசியலில் பலம் வாய்ந்தவர்களுக்கும் அடங்கிபோய்க் கொண்டுள்ளது.

ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் சட்டத்தை நடை முறைப்படுத்துபவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் சமம். "எல்லோருக்கும் எல்லாமே கிடைக்க வேண்டும் என நினைக்கிறார்களோ அன்றுதான் தலித்துகளுக்கு விடுதலை" என்ற அம்பேத்கரின் கனவு நினைவாகும்.

ஒப்பாரி ஓலம் சேரிக்குள்ளே ஒவ்வொரு திசையும் கேட்குதடா விழுந்த பலிகளை கணக்கெடுப்போம்! - வரும் விடுதலைப்போரில் கடனடைப்போம்.

# பறிபோகும் விளைநிலங்கள் பறி தவிக்கும் விவசாயிகள்

"நேற்று வரை நாங்கள் விவசாயிகள். இன்று எங்கள் நிலம் பறிக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே அகதியாக்கப் பட்டுவிட்டோம். நிலம் தான் எங்கள் தாய் எங்கள் தாயை பறித்து எங்களை அனாதைகளாக்கிப் பட்டினியில் தள்ளி விட்டுள்ளார்கள்" என்று குமுறுகிறார் பல்தேவ்சிங் என்ற விவசாயி இவர் பஞ்சாப் மாநிலத்தின் பர்னாலா மாவட்டத்தைச் சேர்ந்த நடுத்தர விவசாயி.

பர்னாலா மாவட்டம் படேகர்சன்னா கிராமத்தில் விளைநிலங்களை ஆக்கிரமித்து பஞ்சாப் மாநில அரசு 300 ஏக்கர் பரப்பளவில் சிறப்பு பொருளாதார மண்டலத்தை நிறுவியுள்ளது. இங்கு டிரிடென்ட் என்ற நிறுவனம் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவி வருகிறது. தங்கள் வாழ்வுரிமையை பறிக்கவந்துள்ள இச்சிறப்பு பொருளாதார மண்டலத்துக்கு எதிராக கடந்த ஒரு மாதமாக இப்பகுதி விவசாயிகள் போராடி வருகின்றனர். அரசாங்கம் தரும் நிவாரணத் தொகையை ஏற்க மறுத்து, எங்களுக்கு நிவாரணம் வேண்டாம். நிலம் தான் வேண்டும். டிரிடென்ட் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகளை 31 ஆம் தேதியன்று டிரிடென்ட் நிறுவனத்தின் கட்டுமானம் பணிகளை தடுத்து நிறுத்தியுள்ளது. அதன் சுற்றுச் சுவரை உடைத்துள்ளார்கள். இதைக்கண்ட ஆட்சியாளர், விவசாயிகள் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை தடுக்கும் வன்முறைச்செயல் என குற்றம் சாட்டி, டிரிமென்ட் கட்டுமானப் பணிகளை பாதுகாத்து இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் காவலர்களை குவித்து அச்சுறுத்தியுள்ளனர். அதையும் துச்சமாக மதித்து கடந்த பிப்ரவரி 2ஆந் தேதி விவசாயிகள் மீண்டும் போராடத்தொடங்கியதும், தடியடி தாக்குதல் நடத்திய காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தி பலரை படுகாயப்படுத்தினர். அங்கு சிதறிக் கிடக்கும் காலனிகளும், இரத்தம் தேய்ந்த தலைப்பாகைகளும், ஜா–யன் வாலாபாக் படுகொலையை நினைவுப்படுத்தியதாக அங்குள்ள பத்திரிகைகள் குற்றம் சாட்டும் வகையில் காவல் துறையின் வெறியாட்டம் நடந்தேறியுள்ளது. பர்னாலா மாவட்டம் மட்டு மல்லாமல் பொற்கோயில் உள்ள அமிர்தசரஸ் அருகே மூன்று போகம் விளையும் பூமியையும், சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக பறிக்கப்பட்டுள்ளது. சஹாரா குழுமம் தொழில் தொடங்க சுமார் 1200 ஏக்கர் நிலத்தை பறிக்க போவதாக பஞ்சாப் அரசு அறிவித்துள்ளது. நிலத்தை கையகப்படுத்த அரசு அதிகாரிகள் வந்தபோது, சுற்றியுள்ள விவசாயிகள் சாலை மறியல் போராட்டம் நடத்தி கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாப் ஐந்து நதிகள் பாயும் வளமான பூமி. பசுமையான வயல்வெளிகள் அறுவடைக்காலங்களில் தங்க நிறத்தில் கோதுமைக் களஞ்சியம்இருப்பினும் தாராளமய மாக்கலை தொடர்ந்து வளம் கொழிக்கும் இம்மாநிலம் படிப்படியாக பாதிக்கதொடங்கியுள்ளது. உணவு தானியக் கொள்முதலை அரசு கைகழுவியதாலும், உரம், பூச்சி மருந்து முதலான பொருள்களின் விலை உயர்வினாலும்,

தாராளமயத்தால், அன்னிய நாட்டு கோதுமை இறக்குமதி காரணமாக விலை வீழ்ச்சியால் பஞ்சாப் விவசாயிகள் ஏழ்மையில் நிற்கிறார்கள்.

பன்னாட்டு ஏக போக விவசாயி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஒப்பந்த முறையில் விவசாயம் செய்தவர்களும் அந்நிறுவனங்களின் வஞ்சகத்தால் திவாலாகி கிடக்கிறார்கள். ஆந்திரா, கர்நாடகாவை தொடர்ந்து இப்போது வளம் கொழிக்கும் பஞ்சாப்பிலும் விவசாயிகளின் தற்கொலை சாவுகள் அதிகரித்து வருகிறது. மாண்சாண்டோ, பி.டி எனப்படும் மலட்டு பருத்தி விதைகளால் நஷ்டப்பட்டும் உற்பத்தி செலவுக்கேற்ற விலை கிடைக்காமல் கடன்பட்டும் சங்ரூர், மான்சா, படிண்டா மாவட்டங்களைச் சேர்ந்த பல ஆயிரம் பருத்தி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். “ஆர்த்தியா” எனப்படும் கந்துவட்டிகாரர்களிடம் சிக்கிக் கொண்டு கடனி-ருந்து மீள முடியாமல் பல பருத்தி விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்துசாகின்றனர். சங்ரூர் மாவட்டத்திலுள்ள கல்பஞ்சரா கிராமத்தில் மட்டும் கடந்த நான்கு மாதங்களில் எட்ட விவசாயிகள் கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்துக் கொண்டதாக அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது. இறந்த விவசாயிகளுக்கு பஞ்சாப் அரசு இதுவரை நிவாரணம் கூட கொடுக்கவில்லை. ஒருகாலத்தில் பருத்தி எடுக்க ராஜஸ்தானி-ருந்து இடம்பெயர்ந்து ஆட்கள் வருவார்கள் இப்போது வேலைத்தேடி இராஜஸ்தான் போய் கொண்டி ருக்கிறோம். நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என விளக்குகிறார் விவசாயி ஒருவர். ஒரிசாவின் க-ங்கா நகர், மேற்குவங்கத்தின் சிங்கூர், நந்திகிராமம், மகாராட்டிராவின் ராய்காட், உ.பி.யின் தாத்ரி, தமிழகத்தின் ஒசூர், பஞ்சாபின் பர்னாலா, எனத் தொடரும் விவசாயிகளின் போராட்டங்கள் வெறும் நிலத்திற்காகவும், கூடுதல் நிவாரணத்திற்காகவும் நடக்கும் போராட்டங்கள் அல்ல. இவை மறு காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் இவற்றை ஒருகிணைத்து மறுகாலனி ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப் போரை நடத்த வேண்டியுள்ளது. நாடும், மக்களும் இன்னும் ஒரு பகத்சிங்கையும், கட்டபொம்மனையும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## நாடு முழுவதும் மொத்த 500-க்கும் மேற்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் நிறுவுவதற்கு மத்திய-மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளது

- 19 மாநிலங்களில் 237 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஒப்புதல் பெற்றுவிட்டன. 23 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஏற்கனவே இயங்கத் தொடங்கிவிட்டன.
- 166 சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான நிலங்களை கையகப்படுத்துவதற்கான கொள்கை அறிவிக்கை செய்வதற்காக கொள்கை ரீதியிலான முடிவு எடுக்கப் பட்டுவிட்டன.
- 237 சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்காக 34.861 ஹெக்டர் நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறது.
- பெரும்பாலான நிலங்கள் சிறு, குறு விவசாயிகளிடமிருந்து கைப்பற்றப்படும் விவசாய நிலங்கள்.
- இதன் மூலம் கோடிக்கணக்கான விவசாயிகள் நில வெளியேற்றத்திற்கு பலியாகிறார்கள்.
- பஞ்சாபில் தற்போது 12 சிறப்பு பொருளாதார மண்டலங் களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டு விளை நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு வருகின்றன.
- 2007 ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் 20க்கும் மேற்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களை நிறுவ முயற்சித்து வருவதாக பஞ்சாப் மாநில முன்னாள் முதல்வர் அறிவித்திருந்தார் அத்துடன் “மாநிலத்தை தொழில்மயமாக்கியே தீருவேன்” என்று கொக்கரித்து வந்தவர் தற்போது மக்களால் வீட்டிற்கு அனுப்பப் பட்டுவிட்டார்.
- சண்டிகர் சுற்றியுள்ள கிராமங்களின் வீடுகளில் இப்போது புதிய எண்கள் குறியிடப்பட்டுள்ளன. “1-6, 1-4, 0.7” என குறி யிடப்பட்டுள்ள எண்கள் புதிய கதவிலக்க எண்கள் அல்ல. சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக அரசாங்கம் கையகப்படுத்தும் விவசாய நிலங்களுக்கான நிவாரணத் தொகையை (இலட்ச ரூபாய் கணக்கில்) விவசாயிகளின் வீட்டு கதவுகளில் உள்ளாட்சி நிர்வாகம் எழுதி வைத்துள்ளது. லாட்டரி சீட்டில் பரிசு கிடைத்தால் மற்றவர்கள் ஆசைப்பட்டு வாங்குவதுப் போல அரசாங்கம் செய்யும் இந்த மோசடிகளை புரிந்துக் கொள்ளாமல் பல விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்க கிளம்புகின்றனர்.
- அரசாங்கமோ சுய விருப்பத்துடன் தான் விவசாயிகள் நிலங்களை விற்பதாக மாயஜாலம் செய்கிறது.
- சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்காக விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கக்கூடாது என்கிறது. மத்திய வர்த்தக அமைச்சகம். பஞ்சாபிலே முப்போகம் விளையும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.
- தரிசு நிலங்களில் தான் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் நிறுவப்படும் என்ற வாக்குறுதி காற்றில் பறந்து தற்போது மூன்று போகம் விளையும் நிலங்களையும் கையகப்படுத்த ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.
- காலனியாதிக்க ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட 1894 ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்தும் சட்டம் புதிய பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு இச்சட்டப்படி பொது பயன்பாட்டிற்கு என்ற பெயரில் நில உரிமையாளரின் ஒப்புதலின்றி எந்த நிலத்தையும் கையகப்படுத்தலாம். இதை எதிர்த்து வழக்கு தொடரக்கூட முடியாது.
- ஏழை நாடுகளின் பெயரளவிலான சுயசார்பையும் ஒழித்து, உணவுச்சந்தையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்ய துடிக்கும் ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்க சதியின் ஓர் அங்கம் தான் இது.
- உணவு உற்பத்தியைக்குறை, மாணியங்களை நிறுத்து, ஏகாதிபத்திய நாடுகளி-ருந்து மலிவான விலையில் உணவு தானியங்களை இறக்குமதி செய் என்று உலக வர்த்தக கழகம் உத்திரவிடுகிறது. இதனடிப்படையில் மானியகுறைப்பு, ரேசன் உணவுப் பொருட்களின் விலையேற்றம், அரசு கொள்முதல் நிறுத்தம் ஏகாதிபத்திய நாடுகளி-ருந்து உணவு தானிய இறக்குமதி என அடுத்தடுத்து தாக்குதல்களை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்டனர். தற்போது அதை தீவிரப்படுத்தும் வகையில் விளை நிலங்களை ஆக்கிரமித்து சிறப்பு பொருளாதார மண்டலங்கள் நிறுவி வருகின்றனர்.

# உலகப் பெண்கள் தினம்

உலகமெங்கும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் நாள் உலகப் பெண்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பெண்கள் ஒடுக்கப்படுவதி-ருந்தும், சுரண்டப் படுவதி-ருந்தும், ஏமாற்றப்படுவதி-ருந்தும் விடுபட்டு தங்கள் உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் நடத்தும் போராட்டம் உலகளவில் நிகழ்ந்துக் கொண்டிருப்பதை குறிக்கும் நாளே இது. நூற்றாண்டு வரலாறு கொண்ட பெண்கள் தினம் அமெரிக்கா, நியூயார்க்கில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண் தொழிலாளர்கள் தங்கள் உரிமையை வலியுறுத்திய நாள். ரஷ்யப் புரட்சியை முன்னெடுத்த இராணுவ வீரர் களோடு இணைந்து அவர்தம் மனைவி, மகள், தாய் மார்கள் அனைவரும் புரட்சிக்கு தங்களையும் அர்ப் பணித்ததை நினைவு கூறும் நாள்.

பெண்களின் ஒட்டு மொத்த விடுதலையை நோக்க மாக கொண்டதே மார்ச் 8. பெண்கள் அனைத்துத் துறைகளிலும் நிலைகளிலும், வலுவுள்ளவர்களாக, உரிமை பெற்றவர்களாக வளர்வதும், உரிமை மறுப்புகளையும், வன்முறைகளையும் எதிர்த்துப் போராடி வெற்றிக்காணுவதும் மார்ச் 8ன் முக்கிய நோக்கம்.

இந்நாளை நினைவு கூறும் விதமாக அரக்கோணம் பகுதியில் மூன்று மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு, தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு மற்றும் தமிழ்நாடு த-த் பெண்கள் இயக்கம் ஆகிய இயக்கங்கள் ஒன்றிணைந்து சென்னை இக்சா சென்டரில் 7.3.2007 அன்று கருத்தரங்கு ஏற்பாடு செய்து நடத்தியது. கருத்தரங்கில் குறிப்பாக சிறப்பு பொருளாதார மண்டலம், நிலம் அபகரிப்பு, விலைவாசி உயர்வு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் வறுமையை போக்க கிட்னி விற்பது, அரசிய-ல் பெண்களின் நிலை, த-த் பெண்கள் மீதான பாதிப்பு என இன்றைய பிரச்சனைகளின் அடிப்படையில் பெண்கள் ஒன்று கூடி பேசினார்கள். இக்கருத்தரங்கு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

# பெண்கள் மீதான வன்முறைக்கு (பேரிடர்) எதிரான பிரச்சாரக் குழுவின் பொது விசாரணை

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று சுனாமிப் பேரலையால் ஆசிய நாடுகளின் கடற்கரையோரம் வாழும் மக்களை தாக்கியது. இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, பாண்டிச்சேரி, அந்தமான் நிக்கோபர் போன்ற மாநிலங்கள், யூனியன் பிரதேசங் களில் மோசமாக தாக்கியது. இதில் உயிர் இழந்தோர் பெரும்பான்மையினர் பெண்கள், குழந்தைகள். தங்களை பாதுகாத்துக் கொள்ள அரசும், தொண்டு நிறுவனங் களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகாம்களில், பெண்கள் தங்கிய குடியிருப்புகளில் ஏற்பட்ட வன்முறைகள், பாலி யல் தொந்தரவுகள் என்ன என்பதை பல்வேறு பகுதிகளில் ஆதாரம் திரட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏற்பட்ட மன ரீதியான பாதிப்புகளும் கணக்கில் அடங்காதவை. அரசும் மற்ற சேவை அமைப்புகளும் நிவாரண உதவி, வாழ்வாதர முன்னேற்றத் திட்டம், மறுசீரமைப்பு திட்டங்களிலும் பெண்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

இதற்கு காரணம் சமூகத்தில் சரிபாதியாக இருக்கும் பெண்களின் நிலையில் வரவேற்கதக்க மாற்றமோ, வளர்ச்சியோ ஏற்படவில்லை. பெண்கள் முன்னேற்றம் என்பது வாய்ச்சொல்-லும், ஏடுகளிலும் மட்டுமே உள்ளது. பெண்களின் உழைப்பு சமூக உற்பத்திக்கான உழைப்பில் அதிகரித்துள்ளது. சமூக, கலாச்சார சூழ-ல் பேரிடர்கள் ஏற்படும் காலங்களில் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்படும் பாதிப்புகள் பாலின சமூக கட்டமைப்பினால் வேறுப்படுகின்றன.

எனவே, தமிழக அரசு பேரிடர் காலத்தில் பாலின கண்ணோட்டத்தோடு நிவாரண மறுவாழ்வு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது என்பதை வலியுறுத்தி, சென்னையில் கடந்த 5–3–2007 அன்று தேனாம் பேட்டை காமராசர் அரங்கில் பொது விசாரணை நடைபெற்றது. இதில் தமிழகத்தின் கடற்கரை மாவட்டங்களி-ருந்து பாதிக்கப்பட்ட பெண்கள் இந்த பொது விசாரணையில் கலந்துக் கொண்டு, தங்கள் மீது தொடுக்கப்பட்ட வன்முறைகளை எடுத்துரைத்தனர்.

பொது விசாரனை காலை 10 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைப்பெற்றது. பொதுவிசாரணையில் தேசிய மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் பத்மபூசன் மோகினிகிரி அவர்களும், தேசிய மனித உரிமை ஆணையத்தைச் சார்ந்த திருமிகு. மைக்கேல் சிரோன்மணி அவர்களும், காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திருமிகு. மார்கண்டேயன் அவர்களும், சென்னை குயின்மேரீஸ் கல்லூரி முன்னாள் பேராசிரியர் பேரா. சரஸ்வதி அவர்களும்,

தூத்துக்குடி செயின்ட் மேரீஸ் கல்லூரி பேராசிரியர் பாத்திமாபாபு அவர்களும் கலந்துக் கொண்டனர்.

பொது விசாரணைக்குப் பிறகு மத்திய, மாநில அரசு களுக்கு கீழ்கண்ட கோரிக்கைகள் வைக்கப்பட்டன. நிவாரணக் காலங்களில் பெண்களுக்கு அத்தியா வசியமாக தேவைப்படும் (உள்ளாடைகள் நேப்கின்ஸ் உள்ளிட்ட) ஆடைகள் கிடைக்காததால் அவர்களது அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. எனவே அரசு இதில் கவனம் செலுத்தி உரிய ஆடைகளை பெண்களுக்கு வழங்க வேண்டும்.

- பெண்கள், குறிப்பாக பாலூட்டும் தாய்மார்கள் குழந்தைகள், கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான பொருட்கள் பேரிடர் முகாம்களில் கண்டிப்பாக அளிக்க வேண்டும்.
- பெண்களையும் குடும்பத் தலைவிகளாய் கருதி நிவாரணப் பொருட்கள், பெண்களிடம் கொடுக்கப் படவேண்டும்.
- தனித்து வாழும் பெண்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோருக்கு பேரிடர் காலங்களில் நிவாணப் பொருட்கள் கொடுக்க வேண்டும்.
- பெண் மகப்பேறு மருத்துவர்கள், பெண் ஆலோசகர்கள் கண்டிப்பாக பேரிடர் சமயங்களில் முகாம்களில் நிரந்தரமாக இருக்க வேண்டும்.
- பெண்களின் (பேரிடர் காலத்தில்) உடல், மன ரீதியான பாதிப்புகளை கருதில் கொண்டு அரசு செயல் பட வேண்டும்.
- முகாம்களில் அனைத்து குழந்தைகளுக்கும் தொடர் கல்வி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- பேரிடரால் பாதிக்கப்பட்ட பள்ளி குழந்தைகளுக்கு சீருடை மற்றும் பள்ளி கட்டணத்தை அரசே பொறுப் பேற்று அளிக்க வேண்டும்.
- முகாம்களில் குழந்தைகளின் மன நிலையை பாதிக்காத வண்ணம் விளையாட்டுத்திடல் அமைக்கப் பட வேண்டும்.

இன்றே செய்! இப்போதே செயல்படு!!

# செங்கல் சூளை தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் கடந்த 10 ஆண்டுகளாக செங்கல் சூளைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக துவங்கப்பட்ட இயக்கம். இன்றைய சூழ்நிலையில் விவசாய நிலங்கள் அனைத்தும் உலகமயமாக்களின் தாக்கத்தில் சிக்கி, விவசாயிகள் பணப்பயிர்களின் மோகத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் விவசாய நிலங்களையும், தொழிலையும் நம்பி இருந்தவர்கள் வாழும் கிராமங்களை விட்டு வேலைத்தேடி இடம்பெயர்ந்துள்ளனர்.

பணமுதலைகள் தங்கள் நிலங்களில் செங்கல் உற்பத்தி செய்து பெரிய சூளைகளாக உருவாக்கி தொழிலாளர்களுக்கு முன்பணம் கொடுத்து தரகர் மூலமாக குறைந்த கூலியில் கொத்தடிமையாக்கப்பட்டு, குழந்தைகளின் கல்வியும், பெண்களின் பாதுகாப்பும், உள்ளூரில் கிடைக்கும் சில சலுகைகளையும், இழந்து அகதிகளைப்போல எந்தவித வசதியும் இல்லாமல் பாதுகாப்பற்ற குடிசைகளில் தங்கி தொழில் செய்து வருகின்றனர்.

குறிப்பாக, அரக்கோணம் சுற்றியுள்ள அருகிலபாடி, பரமேஸ்வரமங்களம், இலுப்பைத்தண்டலம், திருமாதலம் பாக்கம், மங்கம்மா பேட்டை, கைனூர் கண்டிகை ஆகிய கிராமங்களிலுள்ள சூளைகளில் சுமார் 6000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்து, குறைந்த கூலிபெற்று வருகின்றனர். இவர்களில் அதிகமானோர் தலித்துகள், இருளர்கள், பெண்கள், குழந்தைகள் ஒரு சிலர் பிற இனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள்.

செங்கல் சூளை முதலாளிகளின் பார்வை தலித்துகள், இருளர் மீது தான். காரணம் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் அவர்கள், அனைவருக்கும் முன்பணம் கொடுத்து கொண்டுவரப் பட்டவர்கள். அழுக்குபடிந்த துணிகள், வெட்டப்படாத முடிகள், மேக்கப் இல்லாத முகங்கள் இவர்களைப் பார்க்கும் போது, மனித இனத்தை சாராதவர்களைப் போல் நினைத்து தகாத வார்த்தை களால் திட்டுவது, துன்புறுத்தி அடிப்பது, அச்சுறுத்தப் படுவது போன்ற கொடுமைக்கு தொழிலாளர்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் செங்கற்களை ஆறுமாதத்திற்கு ஒரு முறை விலை உயர்த்திக்கொண்டே போகும் முதலாளிகள், அவர்களின் உழைப்பை கணக்கில் கொள்ளாமல், குறைந்த கூலிக்கு செங்கல் உற்பத்தி அமோகமாக செய்து வருடத்தில் பல இருசக்கர வாகனங்களுள், நான்கு சக்கர வாகனங்கள், லாரிகள் போன்றவைகளை வாங்கி மாடி மீது மாடிகட்டி உல்லாச மாக வாழ்ந்து வருகின்றனர்.

தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரியாக ஒருசில தொழிலாளர்கள் தோழர்களில் ஆள்காட்டியாகவும், தரகர்களாகவும், நியமித்துக்கொண்டு அவர்களின்

குடும்பங்களை உயர்த்திக்கொண்டு தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி உல்லாசமாக வாழும் கூட்டத்தை எதிர்க்க தொழிலாளர்களுக்கு தைரியம் இல்லை. தொழிலாளர்களின் கொடுமைகளைக் கண்டு அவர்கள் உரிமைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் செங்கல் சூளை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் பல பயிற்சிகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தி போராட்ட உணர்வை ஏற்படுத்தியது.

தங்களின் உழைப்பை பறித்து, குறைந்தக் கூலிப்பெறும் தொழிலாளர்கள் ஓரணியில் சேர்ந்து, இயக்க உறுப்பினர்களாகி இன்று கூலி உயர்வு போராட்டம் செய்து வெற்றிக்கண்டு வருகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் நாம் எத்தனை மணி நேரம் வேலை செய்கிறோம் என்பதை கூடி பேசி முடிவெடுக்கையில், வேலை துவக்கம் பகல் 2 மணிக்கு மண்ணை தண்ணீர்விட்டு ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு சரியான முறையில் பக்குவமாக கலக்கவேண்டும். மாலை 7 மணிக்கு சென்று சமைக்க வேண்டும். விடியற்காலை 3 மணிக்கு கல் அறுக்க துவங்கி பகல் 2 மணி வரை கணவன் மனைவி சேர்ந்து கூட்டாக உழைக்க வேண்டும். 1000–ம் கல் அறுத்தால் 2 பேருக்கு கூலி ரூ. 150–00, 18 மணி நேரம் உழைப்பவர்களுக்கு தலாரூ. 75–00 மட்டுமே. இதனை பெற்று இன்றைய விலைவாசியின் உயர்வால் எதையும் வாங்க முடியவில்லை என்பது தொழிலாளர்களின் ஆதங்கம்.

கூலி அதிகமாக கொடுத்தால் தான் நாம் கல் அறுக்கமுடியும். இதற்கு இயக்கம் மூலம் ஆலோசனைப் பெற்று கூலி உயர்வு போராட்டம் நடத்த இயக்கத்திற்கு தொழிலாளர்கள் மனு செய்தனர்.

மனுவின் பேரில் இயக்கத்தில் உள்ள தலைமை கமிட்டி உறுப்பினர்களை அழைத்து ஆலோசனை நடத்தியது. இதில் கமிட்டி உறுப்பினர்கள் எடுத்த முடிவு நம்முடைய கோரிக்கைப்படி, கூலி உயர்த்தி கொடுக்கும் வரை வேலைக்கு எந்த தொழிலாளியும் போகக் கூடாது.

நம்முடைய கோரிக்கையை வ–யுறுத்தி தொழிலாளர் நல அதிகாரிக்கு மனு கொடுத்து தெரிவிக்க வேண்டும் என்ற முடிவுடன் 15–01–07 அன்று இயக்க தலைமை அலுவலக்கத்தில் தீர்மானிக்கப் பட்டது.

அதன்படி 17–01–2007 முதல் 23–01–2007 வரை தொடர் வேலை நிறுத்தம் செய்துவந்தனர் தொடர் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்களை எந்த முதலாளியும் கண்டுக் கொள்ளவில்லை. தொழிலாளர்களின் சார்பாக கமிட்டி ஆலோசனைப் படி தொழிலாளர் நல அதிகாரி அரக்கோணம் அலுவலரிடம் மனு கொடுக்கப்பட்டது.

தொழிலாளர் நல அலுவலரின் மூலமாக முதலாளிகளிடம் பேசியபோது மறுநாள் நேரில் பேசுவதாக ஒப்புக்கொண்டு 23–01–07 அன்று தொழிலாளர்கள் 25 பேருடன் தொழிலாளர் நல அலுவலகத்தில் 5 முதலாளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

தற்போது கொடுக்கும் கூலி 1000–க்கு ரூ.150 அத்துடன் ரூ.20 சேர்த்து கொடுப்பதாக முதலாளிகள் கூறிய போது, "தொழிலாளர் நல அலுவலர் "அரசு கூலி நிர்ணயப்படி 1000–ம் கல்லுக்கு ரூ.180 கொடுக்க வேண்டும்" என உத்தரவிட்டார்.

முதலாளிகள் மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டு கூலி உயர்வு பேச்சு வார்த்தை வெற்றிகரமாக நிறைவேறியது. அத்துடன் பேச்சு வார்த்தையில் பங்கேற்ற அனைவரும் மதிய உணவுக்காக ரூ. 1500–ம் முதலாளிகளின் பணத்தில் கொடுத்தனர்.

பணபலத்தால் எதையும், யாரையும், என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று விடாப்பிடியாக இருக்கும் பண முதலாளிகளின் அடக்குமுறை, படை பலத்தால் உள்ள தொழிலாளர்களின் மக்கள் பலத்தால் வெல்லும் என்பது இது ஒரு எடுத்துக்காட்டு "ஒரு நாள் நிச்சயம் விடியும் உன்னால் மட்டுமே முடியும்" என்ற சகாப்தம் அனைத்து தொழிலாளர்களுக்கும் சாத்தியமாகும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

"உன் உடலில் உள்ள இரத்தத்தை தண்ணீராக மண்ணில் பாய்ச்சுகிறவன் தொழிலாளி. தன் வியர்வையை சிந்தி பாடுபடுபவன் தொழிலாளி, தன் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் பிறரின் முன்னேற்றத்திற்கு உழைப்பவன் தொழிலாளி. முதலாளிகள் சிந்திக்கட்டும்."

"உழைத்து, உழைத்து ஓடாய் போன ஏழை கூட்டமே நாம் உழைத்த உழைப்பில் உயர்ந்த தான் இந்த உலகமே" என்ற பாட–ன் வரிகள் அதிகார வர்க்கத்திற்கு பரவட்டும்.

## இயக்கத்தின் மூலமாக தொழிலாளர்கள் வைத்த கோரிக்கைகள் :

- பெண் தொழிலாளர்களுக்கு சுகாதார பாதுகாப்பும், கர்பிணி பெண்களுக்கு ஊதியமும் வழங்க வேண்டும்.
- தொழிலாளர்கள் தங்குவதற்கு பாதுகாப்பான குடியிருப்பு வசதிகள் செய்து தரவேண்டும்.
- விபத்து நேரத்தில் உடனடி அவசர சிகிச்சை முதலாளிகளின் செலவில் கொடுக்கப்பட வேண்டும்.

➢ தொழிலாளர்களுக்கு எந்த சூளையில் அநியாயம், அத்துமீறல், குறைந்த கூலி கொடுக்கப்படுகிறதோ உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**அனுபவம் :–**

செங்கல் அறுக்கும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து வந்த இயக்கம் தற்போது செங்கல் லாரிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களையும் ஒருங்கிணைக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர்கள், நல அதிகாரிகள், முதலாளிகள், இயக்கத்தலைவர்கள் அனைவரும் நேருக்கு நேர் அமர்ந்து பேசக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது.

போராட்ட உணர்வை பெண்கள், தலித்துகள், இருளர் இன மக்கள் அனைவரிடத்திலும் உருவாகியுள்ளதை காண முடிந்தது.

# சாப்பாடு வீணடிப்பதில் முதல் இடம் பிரிட்டன்

உலகிலேயே உணவை அதிக அளவில் வீணாக்குவது பிரிட்டன் மக்கள் தானாம். அவர்கள் வாங்கும் உணவுப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கை வீணடிக்கின்றனர். இதனை ஓர் ஆய்வு தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் 67 லட்சம் டன் உணவு பொருள் வீணாக குப்பை தொட்டிகளில் கொட்டப்படுகிறதாம் பழங்கள், காய்கறிகள், இறைச்சி, பிரட், பால் பொருட்கள்தான் அதிக அளவில் குப்பைகளில் கொட்டப்படுகிறதாம்.

சூப்பர் மார்கெட்டுகள் அதிரடி விலை குறைப்பு போன்ற கவர்ச்சியான அணுகு முறைகளால், மக்களை ஏராளமாக வாங்கத் தூண்டுகின்றன.

மக்களும் அவற்றை சரியாக புரிந்துக் கொள்ளாமல், தந்திரத்துக்கு பலியாகி விடுகின்றனர்.

தங்களுக்கு எவ்வளவுத் தேவை என்பதையெல்லாம் மறந்து, எக்கச்சக்கமாக வாங்கிக் குவித்துவிடுகின்றனர் அதில் மீதமாவதை குப்பைத் தொட்டியில் போட்டு விடுகின்றனர்.

தலைக்கு ரூ.39 ஆயிரம் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் வீணாக வீசியெறியப்படுகின்றன. இந்த கணக்கில் பார்த்தால் ஆண்டுக்கு 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் குப்பைத் தொட்டியில் கொட்டப்படுகின்றன. உலகிலேயே அதிக உணவுப் பொருட்கள் வீணாவது இங்கே தான்.

**பெண்களுக்கு சுதந்திரம் இல்லாத சமுதாயத்தில் உண்மையான சுதந்திரம் இருப்பதாக எண்ணமுடியாது. - வி.ஐ. லெனின்**

**தீண்டத்தகாதவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கப்படும் தலித்துக்கள் முன்னேற வேண்டுமானால் குறிப்பாக தலித் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். பெண்கள் சேவை அமைப்புகளை அழைத்துக்கொண்டு தைரியத்துடன் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து வெற்றிப்பெறவேண்டும். தலித் சமூகத்தின் முன்னேற்றம் என்பது தலித் பெண்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையே குறிப்பதாகும். தலித் பெண்ணிற்கு தன் கணவன் நல்ல ஒத்துழைப்பை தரவேண்டும். மனைவியை அடிமையாக நடத்தப்படாமல், சக அந்தஸ்த்தில் வைத்து உதவி புரியவேண்டும்.**

**- டாக்டர். அம்பேத்கர் அவர்கள் தலித் பெண்கள் அமைப்பில் பேசியது.**

பொறுப்பாளர் : **G. சாந்தி**

**மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பு**

பாலவாய் சென்டர்

எஸ்கு நகர் அஞ்சல், அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம் – 631 002

**ஆண்டு சந்தா : ரூ. 50-00 ரூபாய் ஐம்பது மட்டும்**